# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.32/2023

### அ.சா. 5 (LW 10 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | வினோத்குமார் | **தொழில்** | |
| **த/ பெயர்** | சந்திரமோகன் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **12.02.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**(ஹிந்தி மொழிபெயர்ப்பாளர் பி.அரவிந்தன் முன்பு விசாரணை நடத்தப்பட்டது . விசாரணை மொழி பெயர்த்து எதிரிகளுக்கு ஹிந்தி மொழியில் விளக்கி சொல்லப்பட்டது. )** 1வது எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். 2வது எதிரி ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கோயம்புத்தூரில் குடியிருந்து வருகிறேன். தற்போது கார்மெண்ட்சில் வேலை செய்கிறேன். இதற்கு முன்பு 2022 லிருந்து 2023 ம் வருடம் வரை பன்னாரி மில்லில் AO வாக யூனிட் –2ல் பணிபுரிந்தேன். ஆஜர் எதிரிகளை தெரியும். வெள்ளபொம்மனம்பட்டி செட்டில் ஆஜர் எதிரிகள் தங்கியிருந்தார்கள். 26.08.2022அன்று வெள்ளபொம்மனம்பட்டி பசங்கள் தங்கியிருக்கும் 200 மீட்டருக்கு முன்பாக முட்புதரில் யாரோ ஒருவர் இறந்து கிடந்ததாக தகவல் சொன்னார்கள். 27.08.2022 அன்று காலை 10.00மணி அளவில் வடமதுரை காவல் நிலையத்திலிருந்து என்னை அழைத்தார்கள். நான் மில்லில் ஹிந்தி கோ–ஆர்டினேட்டராக இருப்பதால் ஆஜர் எதிரிகளை தெரியுமா என்று என்னிடம் கேட்டார்கள். எங்களிடம் தான் வேலை பார்த்தார்கள் என சொன்னேன். போலிசார் காவல்நிலையத்தில் ஆஜர் எதிரிகளிடம் என்ன நடந்தது என்ற விவரத்தை என்னிடம் கேட்க சொன்னார்கள். அவர்கள் சொன்ன விவரத்தை ஹிந்தியில் ஆஜர் எதிரிகளிடம் கேட்டேன். ஆஜர் எதிரிகள் அப்போது தமிழ் ஆள் ஒருவரிடம் சண்டை போட்டு விட்டு தமிழ் ஆள் ஆஜர் எதிரிகளின் பின்னால் மூனான்டிபட்டி பஸ்ஸ்டாப்பிலிருந்து சென்றதால் தமிழ் ஆள் ஆஜர் எதிரிகளிடம் பணம் கேட்டு சண்டை செய்ததால் தமிழ்ஆளை அடித்து விட்டு சென்று விட்டோம் என்று சொன்ன விவரத்தை போலிசாரிடமும், பின்னர் போலிசார் ஆஜர் எதிரிகளின் வீட்டிற்கு போனில் ஹிந்தியில் தகவல் சொன்னேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எங்கள் மில் வடமதுரை காவல்நிலைய எல்லைக்குள் இருக்கிறது. எங்கள் மில்லில் ஏதாவது பிரச்சனை என்றாலும் வடமதுரை காவல்நிலையத்திற்கு செல்வோம். அந்த மில்லில் சுமார் 200 வடமாநில தொழிளார்கள் வேலை செய்கிறார்கள். அவ்வப்போது போலிசார் வடமாநில தொழிலாளர் பற்றி விவரங்களை கேட்டு செல்வார்கள். நான் போலிசாரிடம் கோ– ஆர்டினேட்டர் என்ற முறையில் நான் தகவல் சொல்வது வழக்கம். மில்லில் நடக்கும் பிரச்சனைகளை வடமதுரை காவல்நிலையத்தில் வைத்து முடித்து வைப்பார்கள். நான் கோ–ஆர்டினேட்டர் என்ற முறையில் வடமதுரை காவல்நிலையம் சென்று பேசி முடித்து வைத்து வருவேன். நான் ஹிந்தி மொழி படித்துள்ளேன் என்பதை காட்டுவதற்கு எவ்விதமான சான்றிதழும் போலிசாரிடம் கொடுக்கவில்லை. நான் காவல்நிலையத்திற்கு செல்லம 27ந்தேதிக்கு முன்பாக ஆஜர் எதிரிகள் அதற்கு முன்பான 24,25,26 ஆகிய தேதிகளில் வழக்கம் போல் மில்லிற்கு வேலைக்கு வந்து சென்றார்கள். அன்றைய தினங்களில் மில்லில் வழக்கம் போல்தான் வேலை நடந்து கொண்டிருந்தது. மில்லில் ஏதாவது கிசுகிசுக்களோ, சர்ச்சையான பேச்சுக்களோ பேசினால் அது உடனே அது எனது கவனத்திற்கு வந்து விடும். மேற்படி 24,25,26 ஆகிய தேதிகளில் மேற்படி எந்த விதமான மேற்படி விவரங்கள் எதுவும் நடைபெறாமல் மில் வழக்கம் போல் நடந்தது. ஹிந்தி காரர்கள் தங்கியிருக்கும் செட்டில் அங்கிருந்தும் எந்த தகவலும் வரவில்லை. போலிசார் எனக்கு வழக்கை பற்றி சொல்லும் வரை எனக்கு இந்த வழக்கை பற்றி தெரியாது. போலிசார் ஆஜர்எதிரிகள் தமிழ்காரை அடித்த விவரம் சொல்லிதான் எனக்கு தெரிய வந்தது. . எதிரிகளை போலிசார் எப்போது அழைத்து சென்றார்கள், அவர்களை யார், யார் சென்று சந்தித்தார்கள் என்றும், அவர்களுக்கு என்ன சொல்லிக் கொடுக்கப்பட்டது என்பது எனக்கு தெரியாது. போலிசார் எதிரிகள் பெற்றோருக்கு தகவல் சொல்லச் சொன்ன விவரம் மட்டும் தான் தெரியும். எதிரிகள் தமிழ்காரரை அடிக்கவில்லை என்றாலும் போலிசார் காவலில் அவ்வாறு சொல்லச் சொன்னதால் எதிரிகள் பயந்து கொண்டு சொன்னார்கள் என்றால் சரியல்ல. போலிசார் என்னிடம் வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை, என்னிடம் 2 கையெழுத்து வாங்கினார்கள், எந்தெந்த ஆவணத்தில் கையெழுத்து வாங்கினார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல எதிரிகள் எந்த ஒரு சம்பவம் பற்றி எதுவும் சொல்லவில்லை என்றாலும் போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.02.12 21:16:54 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.